repertoire - தெரிவுத் தொகுதி
repertory - அரும்பொருள் களஞ்சியம்
repetition - கூறியது கூறல்
repetitive job - திரும்பச் செய்யும் வேலை
repiner - மனக்குறைகொள்ளுவோன்
replace - திரும்பவும் வை, நிரப்பு,
பழைய இடத்தில் மீள வை,
மாற்றீடு, மீள அமர்த்து,
மீள இடத்தை நிரப்பு, மீள இருத்து
replacement - மீளமர்த்தம், மீளவைத்தல்
replacement arthroplasty - மாற்று மூட்டுச் சீரமைப்பு
replacement cost - மாற்றீட்டுச் செலவு
replacement deposit - மாற்றுப்படுகை
replacement theory - இடப்பெயர்வுக் கொள்கை
replantation - மறு நடவு
replenish - குறைந்ததை நிரப்பு,
மீள நிரப்பு, விடுபட்டதை நிரப்பு,
replenishment - குறைந்ததை மீண்டும் நிறைவு
செய்தல்
replete - ஏராளமான, நிறைந்த,

| | | |
|---|---|---|
| | | முழுமையான, முழுவதுமான |
| repletion | - | ஏராளம், மிக அதிகம், முழுமை, ஈடுகட்டுதல் |
| replica | - | உருவ நேர்படி, நேர் பகர்ப்பு |
| replication | - | போலச்செய்தல் |
| reply | - | மறுமொழி, விடை |
| repntation | - | புகழ்ச்சி |
| report | - | அறிக்கை, அறிக்கையிடு, அறிவி, செய்தி அறிவி, தெரிவி |
| report call | - | உறுதிப்பாட்டு அழைப்பு |
| report evaluation | - | மதிப்பீட்டறிக்கை |
| report is awaited | - | அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது |
| reported | - | தெரிவிக்கப்பட்ட, விளக்கமளிக்கப்பட்ட |
| reporter | - | செய்தியாளர் |
| reporting officer | - | அறிவிப்பு அலுவலர் |
| reports and returns | - | செய்தி அறிக்கைகளும் காலமுறை அறிக்கைகளும் |
| repose | - | நம்பிக்கை, நம்பிக்கை வை |
| repository | - | களஞ்சியம், குவிந்துள்ள இடம், தேக்கி வைத்துள்ள இடம், பண்டசாலை, காப்புக்கிடங்கு, குவையம் |
| repossession | - | உடைமை மீட்டல் |
| repost | - | விரை எதிர் வெட்டுரை |
| repotting | - | தொட்டிமாற்றி நடுதல் |
| reprecipitation | - | மீள் வீழ்படிவாக்கல் |
| reprehensible | - | கண்டிக்கத்தக்க, குற்றம் கூறத்தக்க |
| represent | - | எடுத்துரை, சார்பாளராயிரு |
| representation | - | சார்பு, பெயராண்மை, முறையீடு |
| representation and protests | - | முறையீடுகளும் மறுப்புகளும் |
| representative | - | சார்பாளர், பகராளி |
| repression | - | அடக்குமுறை |
| reprice | - | விலைமாற்றம் |

reprieve - இடை ஓய்வுக்காலம்,
reprimand - கண்டனம் தெரிவித்தல்,
கண்டித்தல், கடிந்துரைத்தல்
reprint - மறுபதிப்பு
reprinted - மறு அச்சிடப்பட்ட,
மீண்டும் அச்சிடப்பட்ட
reprinting - மறு அச்சடிப்பு
reprisal - பழிவாங்கு நடவடிக்கை
reproach - இடித்துரை, பழித்துரை, இகழ்ச்சி
reproachful - கடுஞ்சாடல் நிறைந்த
reprobate - பழிக்கு அஞ்சான்
reproduce - இனப்பெருக்கம் செய்,
படி எடு, மீளாக்கம், மறு ஆக்கம்
reproduced - மீண்டும் உருவாக்கப்பட்ட,
மீளாக்கிய, மீண்டும்
முன்வைக்கப்பட்ட
reproduction - இனப்பெருக்கம்,
மறு ஆக்கம், மீளாக்கம் ,
மறு உருவாக்கம்
reproduction vegetative - விதையிலா மறு உருவாக்கம்
reproductive - மீண்டும் உருவாக்கம் செய்கிற,
மீளாக்கிய
reprography - படிவியல்
reproof - கடிந்துரை, குற்றங் கூறு
reprover - கடிந்துகொள்வோன்
reptant - நிலப்படரி
reptilia - முதுகெலும்பு ஊர்வன
republic - குடியரசு
republican - குடியரசு கொண்ட,
republish - மறுவெளியீடு,
மீண்டும் வெளியிடு
repudiate - உடைமை துற, ஏற்க மறு,
விலக்கு
repudiation - ஏற்காதிருத்தல், மறுப்பு, மறுத்தல்
repugnance - ஒத்திசையா நிலை,முரண்பாடு

repugnant - ஒத்திசையாத, நேரெதிரான, முரண்பாடான

repulsive - முரண்பாடான, வெறுத்தொதுக்குகிற, வெறுப்பூட்டுகிற

repurchase - மறு கொள்முதல்

reputable - புகழ் மிக்க, புகழ் வாய்ந்த, புகழ்பெற்ற, பெயர்பெற்ற, மதிக்கத்தக்க

reputation - நற்பெயர், நன்மதிப்பு, புகழ்

reputed - புகழ் பெற்ற, புகழ் மிக்க, மதிக்கப்பட்ட

request - கோரிக்கை, வேண்டுகோள்

requested - வேண்டிக் கேட்டுக் கொண்ட

requicken - மீண்டும் விரைவுபடுத்து

requiescat - நீத்தார் அமைதி வேண்டல், இரந்து கேட்டல்

require - கேள், கோரு, விரும்பு

requirement - கோரிக்கை, தேவை, வேண்டப்படுவன

requirer - கேட்போன்

requisite - தேவையான, வேண்டிய

requisites - தேவையானப் பொருள்கள்

requisition - எழுத்துவழி வேண்டுகோள்

requisition slip - வேண்டுதல் சீட்டு

requisitioning of property - உடைமையைக் கைப்பற்றுதல்

requital of obligation - கடப்பாட்டின் கைம்மாறு, மாற்றுதவி

requite - கைம்மாறு செய்

rerail - தடமேற்றம்

re-reckoning - மறுகணிப்பு

rerecording - மறு ஒலிப்பதிவு

rerun - மீளியக்கம்

res gestae - தொடர் செயல்

res judi - முன்தீர்ப்புத் தடை

res judicata - மறுதீர்ப்புத் தடை
res nullius - பொது உரிமை
resale - மறு விற்பனை
resalutation - பதிலுக்கு வணங்குதல், மறு வணக்கம்
resalute - திரும்ப வணங்கு, பதிலுக்கு வணங்கு
rescattering - மீள்சிதறல்
re-scheduled - மறு திட்டமிடல்
rescind - தள்ளுபடி செய், மாற்று, உத்தரவை அழி
rescission - நீக்கம், மறுப்பு, விலக்குதல், அழிப்பு
rescue - காப்பாற்று, மீட்பு, மீட்புதவி, விடுவி, மீட்புப்பணி
rescue drill - மீட்புப் பயிற்சி
rescue operation - மீட்பு நடவடிக்கை
rescuer - விடுவிடுப்போன்
resdeda - வெளிர் பச்சைநிறம்
research - ஆய்வு, ஆராய்ச்சி
research centre - ஆய்வு நடுவம் ஆராய்ச்சி மையம்
research garden - ஆய்வுத் தோட்டம்
research library - ஆராய்ச்சி நூலகம்
research officer - ஆராய்ச்சி அலுவலர், ஆய்வு அலுவலர்
research plot - ஆய்வுப் புலம்
research scheme - ஆராய்ச்சித் திட்டம், ஆய்வுத் திட்டம்
researcher - ஆய்வாளர், ஆராய்ச்சி செய்பவர், ஆராய்ச்சியாளர்
resedimentation - மறு வண்டல் படிவு
resemblance - ஒத்திருத்தல், போன்றிருத்தல், ஒப்பு
resemble - ஒத்த, ஒத்திரு

reservation - ஒதுக்கீடு, முன்பதிவு
reservation of appointment - நியமன ஒதுக்கீடு, பணியமர்த்த ஒதுக்கீடு
reserve - இருப்பு, ஒதுக்கம், காப்பு
reserve aircraft - சேம வானூர்தி
reserve arms - சேமப் படைகள்
reserve bank of india - இந்தியச் சேம வைப்பகம்
reserve box - சேமப் பேழை
reserve fund - ஒதுக்க நிதி, காப்பு நிதி
reserve police - சேமக் காவலர், சேமக் காவல் பிரிவு
reserve price - ஒதுக்கீட்டு விலை
reserved - ஒதுக்கீடு செய்த, ஒதுங்கி நிற்கிற, கலந்து பழகாத, பாதுகாக்கப்பட்ட, முன்பதிவு செய்த
reserved collection - ஒதுக்கப்பட்ட திரள்
reserved forests - காப்புக் காடுகள்
reserved land - ஒதுக்கிய நிலம்
reserved seat - ஒதுக்கிய இடம்
reserved tree - காப்பு மரம்
reservedness - கூச்சம்
reserves - சேமப்படைப் பகுதி, நெருக்கடி நிதி
reserving - முன்பதிவு
reservist - சேமப் படைவீரர்
reservoir - நீர்த் தேக்கம்
reservoir rock - தேக்கப் பாறை
resetensa - நினைவுக் கூறு
resettlement - நிலத்தீர்வை மறு விதிப்பு, நிலவரி மறு ஏற்பாடு, மறுகுடியேற்றம்
resettlement assistance - மறுவாழ்விப்பு உதவி
resfeber - பயணக்காய்ச்சல்
reshape - மீண்டும் உருக் கொடு, மீண்டும் உருவமை

reshuffle - மாற்றியமை
reshuffling - மாற்றுதல்
reside - குடியிரு, வசி
residence - குடியிருப்பிடம், குடியிருப்பு
resident - வசிப்பவர்
resident director - உள்ளுறை இயக்குநர்
residential - குடியிருப்பு சார்ந்த, வசிப்பிடம்
residential area - குடியிருப்புப் பகுதி
residential scholarships - விடுதி உதவித்தொகை
residiuary power - எஞ்சிய அதிகாரம்
residual - மிச்சமான, மீதியான
residual schizophrenia - எஞ்சிய மனச் சிதைவு
residual sediment - எச்ச மாழை வண்டல்
residual soil - எஞ்சிய மண்
residual stress field - எச்சத் தகைப்புலம்
residuary clay - எச்ச களிமண்
residuary legatee - விருப்பாவண வழி எஞ்சுரிமையர்
residue - எஞ்சியது, மிச்சம்
residues method - எச்சமுறை
residul penetration - எச்ச நுழைவு , ஊடுறுவல்
resign - பதவி விலகு, பதவியை விடு, பதவியைத் துற
resignation - பதவி விலகல்
resiliance - பின்னடைவு, மீட்டெழுச்சி
resilient system - பயிர் காப்புத் திட்டம்
resin - பிசின்
resin pellets - பிசின் குளிகைகள்
resin poison - பிசின் நச்சு
resin soaps - பிசின் வழலைகள்
resin-bonded plywood - பிசின் ஒட்டிய ஒட்டுப் பலகை
resinification - பிசினாதல்
resinography - பிசினியல்
resinous cement - பிசின் பைஞ்சுதை
resinous lusture - பிசின் மிளிர்வு

resinous substance - பிசின் பொருள்
resist - எதிர்ப்பு செய், தடங்கல் செய், தடை செய்
resist print - தடுப்பச்சு
resistance - தடுப்பாற்றல், நோய் எதிர்ப்பு ஆற்றல்
resistance environmental - சூழல் சார் தடை
resistance shock - அதிர்ச்சித் தாங்கி
resistance wire - மின்தடைக் கம்பி
resistant - எதிர்க்கிற, தடங்கல் செய்கிற, தடுக்கிற
resistant host - நோயெதிர்ப்பு ஓம்புயிரி
resistant variety - நோய் எதிர்ப்பு வகை
resisting force - தடை விசை
resisting medium - தடை ஊடகம்
resistivity - தடுப்பாற்றல்
resolute - உறுதி கொண்ட, பின்வாங்காத
resolution - தீர்மானம், முடிவு, பிரிதிறன்
resolution time - ஐய நீக்க நேரம்
resolve - தீர்மானம் செய், தீர்மானம் நிறைவேற்று, தீர்மானி, முடிவு செய்
resolved sections - தீர்மானம் நிறைவேற்றப்பட்டப் பகுதிகள்
resolver - உறுதிசெய்வோன்
resolving cell - பகு மின்கலம்
resolving limit - பிரிகை வரம்பு
resonance - எதிரொலி
resonant - எதிரொலிக்கிற
resonator - ஒத்ததிர்வி
resort - கூடும் இடம், தங்குமிடம், புகலிடம், போக்கிடம், மகிழ்விடம்
resorter - அடைக்கலம் புகுவோன்
resound - எதிரொலி செய், முழங்கு, மறுமொழி

resounded - எதிரொலித்த
resource - வாய்ப்பு வளம்
resource person - வல்லுநர்
resource teacher - புலவள ஆசிரியர்
resourceless - வழியற்ற, வாய்ப்பு வசதியற்ற
resources - மூல வளங்கள், வள வாய்ப்புகள்
respect - கண்ணியம், தொடர்பு, மதிப்பு
respectable - மதிப்பிற்குரிய
respected - மதிப்பிற்குரிய, மதிப்பு மிக்க, வணங்கத்தக்க
respecter - முகமன்
respectful - மதிப்புடன்
respectfully - நன்மதிப்புடன்
respective - தொடர்பான
respirator - மூச்சுச் சீராக்கி
respiratory failure - மூச்சுப் பழுது
respiratory organ - மூச்சுறுப்பு
respite - இடை ஓய்வு, இடையமைதி
resplendant - பகட்டான, பெருஞ்சிறப்புடைய, பேரொளி வீசுகின்ற
respond - மறுமொழி கூறு
respondent - எதிர் வழக்காளர், மேல்முறையீட்டாளர், வழக்கெதிரர்
response - எதிர்ச் செயல், ஏற்புத் தன்மை, பதில்குறிப்பு, எதிர்ச்செயல்
responsibility - பொறுப்பு
responsible - சொல்லக்கூடிய, பொறுப்புடைய, மறுமொழி, எதிர்வினைபுரிகிற, விடையளிக்கிற
respository - சேமக் கிடங்கு
rest - அமைதி, ஓய்வு
rest house - ஓய்வில்லம், ஓய்வு விடுதி
restagnant - ஒதுங்கி நிற்றல்

| | | |
|---|---|---|
| restart | - | மறு தொடக்கம், மீள்தொடக்கம் |
| restaurant | - | உணவகம் |
| restful | - | ஓய்வுக்குகந்த |
| restiffness | - | அடங்காமை |
| resting | - | சார்ந்துள்ள |
| restitution | - | சீர்ப்படுத்திக் கொடுத்தல், பறித்ததை மீட்டுக் கொடுத்தல், மீட்டளிப்பு |
| restitutor | - | சீர்படுத்துவோன் |
| restive | - | ஒட்டாரமான |
| restless | - | அமைதியற்ற, கவலை கொண்ட, மனம் கலங்கிய |
| restock | - | மீளவும் இருப்பு வைத்தல் |
| restoration | - | சீராக்கம், திருப்பிக் கொடுத்தல், மீட்டுருவாக்கம், மீட்பு |
| restore | - | புதிதாக்கு, மீண்டும் உருவாக்கு |
| restore normalcy | - | இயல்புநிலை மீட்டல் |
| restrain | - | அடக்கி வை, தடுத்து நிறுத்து |
| restraining | - | தடை செய்தல் |
| restraint | - | கட்டுப்படுத்தல், தடை, தன்னடக்கம் |
| restrict | - | எல்லைக்குட்படுத்து, கட்டுப்படுத்து, தடு, தடை செய், தடையேற்படுத்து |
| restricted movement | - | கட்டற்ற இயக்கம் |
| restricted zone | - | வரையறை மண்டிலம் |
| restriction | - | தடை, தடைக்கட்டு, வரையறை |
| restrictive | - | தடுக்கிற, தடைசெய்கிற |
| restructured | - | மறுபடி அமை, மீள் அமை |
| resubmitted | - | மீளப் பணிந்தனுப்பப்படுகிறது |
| result | - | தேர்வு முடிவு, பயன், பலன், முடிவு, விளைவு |
| result oriented | - | பலனை நோக்கமாகக் கொண்ட, பலனை நோக்கியதான |
| resultant | - | பயனான, விளைவான |

resultant benefit - உறுபயன், விளைபயன்
resulted - விளைவு அடைந்த, விளைவுற்ற
resumaybe - தகுதி உண்மை
resume - தன்திறன் தொகுப்பு,
தன்வாழ்குறிப்பு,
தன் வரலாறு, தன்குறிப்பு
resumption - மறுதொடக்கம்,
மறுபடி ஏற்றல்
resumption of funds - நிதியைத் திரும்பக்
கைக்கொள்ளுதல்
resurgence - எழுச்சி, மீட்டெழுச்சி, புத்தெழுச்சி
resurgent - புத்தெழுச்சி , புத்தாக்கமுடைய
resurrect - புத்துயிர்ப்பு,
மீண்டும் நடைமுறைப்படுத்து
resurrection - புதுப்பித்தல்
retail - சில்லரை விற்பனை
retail price - சில்லரை விலை
retailer - சில்லரை வணிகர்
- சில்லறை விற்பனையாளர்
retain - கொண்டிரு, நிறுத்தி வை,
வைத்திரு
retained disposal (R.Dis.) - நிலையான முடிவு (நி.மு.)
retaining fee - வழக்குரைஞர் தொடர் கட்டணம்
retaining wall - தாங்கு சுவர்
retake - திரும்ப எடுத்துக் கொள்,
மீண்டும் எடு
retaliate - எதிர்ச் செயல், எதிர்த் தாக்கு
retard - காலத்தாழ்ச்சி, சுணக்கம் செய்,
தடங்கல், தடை
retardation - தடங்கல், தடை,
தாழ்ச்சி, பின்னடைவு
retch - குமட்டல்
retention - நிறுத்தி வைத்தல்,
வைத்திருத்தல்
retiarius - வாட்போர் வீரன்

reticence - நாவடக்கம்
reticle - சிறுவலை
reticular - வலையுரு
reticulum - அசைபோடும் இரைப் பை
retino - விழித் திரை
retinopathy - விழித்திரையழிவு நோய்
retinue - தொழும்பர், அலுவல் பணிக்குழு
retire - ஓய்வடை, ஓய்வுகொடு, பணி ஓய்வு பெறச்செய், பணி ஓய்வுபெறு
retired - பணியிலிருந்து ஓய்வு பெற்ற
retirement - ஓய்வு, பணி ஓய்வு, பணி நிறைவு
retiring age - பணி ஓய்வு பெறும் வயது, பணி ஓய்வு அகவை
retiring pension - பணி ஓய்வூதியம்
retiring room - ஓய்வறை
retold - திரும்பச் சொல்லப்பட்ட
retort - எதிருரை, எதிர்க்கூறு, எதிர்த்துச்சொல்
retracted confession - மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம், மாற்றப்பட்ட குற்ற ஏற்புரை
retraining - மறு பயிற்சி
retransfer - மறுமாற்றல்
retransferred - மறுமாற்றல் செய்யப்பட்ட
retranslation - மறு மொழிபெயர்ப்பு
retransmit - திருப்பியனுப்பு
retreading - உருளிப்பட்டைப் புதுப்பிப்பு, மறுபட்டையிடல், மீள்மிதியல், மேற்பட்டையிடல், வட்டைப் புதுப்பிப்பு
retreat - பின்வாங்கல்
retrench - அகற்று, ஆட்குறைப்பு, ஆளைக்குறை, குறைவாக்கு

retrenched - ஆட்குறைப்புச் செய்த, குறைக்கப்பட்ட

retrenchment - ஆட்குறைப்பு
பணியாளர் குறைப்பு

retrenchment list - பணியிழந்தோர் பட்டியல்

retrenchment of staff - பணியாளர் குறைப்பு

retrial - மறு ஆய்வு, மறு உசாவல் , மறு நேர்கேட்பு, மறு விசாரணை

retribution - பழி எதிர்ச் செயல்

retrieve - சீர்திருத்து, பழுது நீக்கு, மீட்டெடு, மீட்டெடுத்தல், மீண்டும் பெறு

retriming - மீண்டும் செம்மை செய்தல்

retro - பின்புறம், பின்னுக்கு, பின்னோக்கிய முந்தைய

retro action - எதிர்வினை

retro walking - பின்னடை

retrocede - திரும்பச்செல்
- பின்னோக்கிச் செல்

retrocession - பின்னோக்கிச் செல்லுதல்
- திரும்பிச் செல்கை

retroflex flap - வளை நா வருடொலி

retroflex stop - வளை நாத் தடையொலி

retrograde - பின்னோக்கிச் செல்கிற
- வீழ்ச்சி முகமான

retrograde amnesia - பின்னோக்கு நினைவிழப்பு

retrogression - பின்னோக்கிச் செல்தல், வீழ்ச்சி, வீழ்ச்சி முகமான பின்னோக்கிச் செல்கிற

retrospect - பின்னோக்கம்

retrospection - பின்னோக்கல்

retrospective - பின்னோக்கம்

retrospective effect - பின்னோக்கிய பயன்
முன்நாளிட்ட பயன்

retrospective study - பின்னோக்கு ஆய்வு

retruse - மறைவான
return - திரும்ப அளி,
return counter - திருப்பிக் கொடுக்குமிடம்
return of document - ஆவணத்தைத் திருப்பிக் கொடுத்தல்
return ticket - திருப்புகைப் பயணச் சீட்டு
returned - திருப்பி அனுப்பப்படுகிறது திரும்பி வந்த, மீண்டும் வந்த
returning officer - தேர்தல் அலுவலர், தேர்தல் பொறுப்பு அலுவலர்
returns - விளக்க அறிக்கை
reuful - துக்கத்தை வெளிப்படுத்தல்,துயர் வெளிப்படுத்தல்
reunion - திரும்பச் சேர்தல், மீண்டும் சேர்தல்
reunite - சேர், மீண்டும் இணை, மீண்டும் சேர்
reunited - மீண்டும் இணைந்த மீள் ஒருங்கிணைந்த
reurge - மீண்டும் தூண்டு, மீண்டும் வலியுறுத்து
revalidation - மீண்டும் செல்லுபடியாக்கல்
revaluation - மறுமதிப்பீடு
revalue - மறுமுறை மதிப்பிடு
revamp - சீரமைப்பு
reveal - வெளிப்படுத்து, வெளியிடு
revealing - வெளிப்படுத்துகிற, வெளிப்பட்ட
reveille - பள்ளியெழுச்சியொலி
revel - குடிவெறியாட்டம், களியாட்டவிழா
reveling - விருந்துக் களிப்பு
revelry - வெறியாட்டு
revenant - நாடுகடத்தப்பட்டு மீண்டவர்
revenge - பழியுணர்வு, பழிவாங்கு

revengeful - பழிவாங்குதல்
revengement - பழிவாங்குகை
revenue - வருவாய்
revenue board - வருவாய்க் குழு,
வருவாய்க் குழுமம்
revenue department - வருவாய்த் துறை
revenue deposit - வருவாய் வைப்புத்தொகை
revenue division - வருவாய்க் கோட்டம்
revenue receipts - வருவாய்த் துறை வரவினம்
revenue recovery - வருவாய்ப் பிடித்தம்
revenue remission - வரவுத் தள்ளுபடி
revenue stamp - வரி வில்லை
revenue summons - வருவாய்த் துறை அழைப்பாணை
reverbration - எதிர் அலைவு
revere - மதிப்பு கொடு, மரியாதை
reverence - பெருமதிப்பு, அச்ச இறையன்பு
reverencer - பணிவிடை செய்வோன்
reverend - மதிப்பிற்குரிய,
வணக்கத்திற்குரிய
reverent - மரியாதையுள்ள
- மேதகைமை
reverential - மேன்மை மிக்க
reverie - பகற்கனவு
reversal - தலைகீழாக்குதல், திருப்பம்,
புறந்திருப்பல், பெரும்
மாற்றமுள்ள
reverse - தலைகீழான, பின்புறம்
reverse graffiti - சுவர் மாசு மறைப்பு ஓவியம்
reverse printer - இருதிசை அச்சுப் பதிவி
reverse swing - பின்சுழற்சி
reversed - திருப்பப்பட்ட, திரும்பிய
பழைய பணிக்குத் திருப்பப்பட்ட
reversing motion - பின்னோக்கு இயக்கம்,
பின்னோட்ட இயக்கம்
reversing roll - பின் சுற்றுருளை

| | | |
|---|---|---|
| reversion | - | பணியிறக்கம், முந்தைய பணிக்குத் திரும்பல் |
| reversioner | - | உரிமை மீட்பவர் |
| revert | - | திரும்பிச் செல், பழைய நிலைக்குத் திருப்பு, மாற்று |
| reverted | - | பழைய நிலைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட, பழைய பதவிக்குத் திருப்பி அனுப்பப்பட்ட |
| revertent | - | சீர்படுத்து மருந்து |
| revertible | - | மாற்றத்தக்க |
| revertment | - | அணை சுவர், பற்றுச் சுவர் |
| review | - | மறு ஆய்வு |
| review petition | - | மறு ஆய்வு மடல் |
| reviewed | - | ஆய்வுசெய்யப்பட்ட |
| reviewer | - | திறனாய்வாளர் |
| reviling | - | இகழ்ச்சி |
| revisal | - | மறு ஆய்வு |
| revise | - | திருத்தம் செய், திருத்தி எழுது, பிழைதிருத்தம் செய் |
| revised | - | திருத்தப்பட்ட, திருத்திய |
| revised estimate | - | திருத்திய மதிப்பீடு |
| revised proposal | - | திருத்தப்பெற்ற கருத்துரு |
| reviser | - | திருத்துபவர் |
| revision | - | சீராய்வு |
| revision petition | - | சீராய்வு மடல் |
| revision test | - | திருப்புத் தேர்வு |
| revivable | - | உயிரூட்டத்தக்க, பிழைத்தெழச் செய்யத்தக்க |
| revival | - | புத்தாக்கம், புத்துயிரளிப்பு, மீட்டுயிர்ப்பு |
| revivalist | - | புத்தெழுச்சி ஆதரவாளர் |
| reviviscent | - | புத்தாக்கம் பெற்ற |
| revulsion | - | திடீர்ப் பிரிவு |

revocable - கண்டனம் செய்யத்தக்க, திரும்பப் பெறத்தக்க, நீக்கத்தக்க, மறுக்கத்தக்க, மாற்றத் தகுந்த, மாற்றத்தக்க

revocation - கண்டனம், திரும்பப் பெறல், நீக்கல், மறுப்பு

revoke - தள்ளுபடிசெய், திரும்பப் பெறு, நீக்கு, மறு தேர்வு, மாற்று, மீள் நிலைப்பாடு

revolt - கிளர்ச்சி செய், புரட்சி செய்

revolting - அருவருப்பான, வெறுப்பூட்டுகிற

revolusongs - புரட்சிப் பாடல்கள்

revolution - சுழற்சி, புரட்சி

revolutionalize - பெருமாற்றம் செய்

revolutionary - புரட்சியான

revolutionist - புரட்சிக்காரன், புரட்சியாளன்

revolve - உருள், சுழல், சுற்று

revolver - சுழல் கைத்துமுக்கி, சுழல் துமுக்கி

reward - பரிசு, வெகுமதி

reward power - விருது வழங்கல் அதிகாரம்

rewarded - பரிசளிக்கப்பட்ட

rewild - சூழல்பேணு

rewinding - மறுதிருகல், மீளச் சுற்றுதல்

rewritten - திரும்ப எழுதப்பட்ட

regur - வழக்கமான, கரிசல் மண்

rhabdomancy - தண்டூகம், குறி கூறுநர் கோல்

rhapsode - எழுச்சிப் பா, மிகு ஆர்வமான, உணர்ச்சிக் கொந்தளிப்பு

rheology - ஒழுகியல் நூல்

rheostat - மின் தடைமாற்றி

rhetor - சொல்வள ஆசிரியர்

rhetoric - சொல்லணி

rhetorical - சொல்லாட்சி

rhetorics - அணியியல்

rheumatic - ஊதை நோயர்
rheumatic fever - ஊதைக் காய்ச்சல் , ஊதைச் சுரம்
rheumatic walk - மூட்டு வாத நடை
rhexis - நாள முறிவு
rhinal - மூக்கு சார்ந்த
rhinestone - படிகக் கல்
rhinolalia - மூக்கடைப்பொலி
rhinologist - மூக்கியலர்
rhinology - மூக்கியல்
rhinometer - மூக்களவி
rhinosporidosis - மூக்குக் காளான்
rhizocarp - அழியா வேர்
rhizome - தண்டுக் கிழங்கு
rhizome rot - கிழங்கழுகல் நோய்
rhizomorph - வேருரு
rhodes scholar - உதவித் தொகைபெறும் அறிஞர்
rhodophyta - செம்புதலிகள், செம்புதர்கள்
rhombencephalon - பின் மூளை
rhombohedron - அறுமுக சதுர முக்கோணம்
rhomboids - சாய்சதுரத் தசை
rhombus - சாய்சதுரம்
rhonchi - கீச்சொலி
rhonchus - மூச்சிரைப் பொலி
rhydration - மறு நீரேற்றம்
rhymer - எதுகை மோனை
rhyming dictionary - தொடை முறை சொற்களஞ்சியம்
rhyparograph - ஒளிப்படப் படியெடுப்பு
rhyparography - நிலை ஓவியம்
riant - மகிழ்ச்சியான
rib cage - விலாக் கூடு
ribbing - விலாயெலும்பு
ribbon grass - அழகுப் புல்வகை
ribbon worms - நாடாப் புழுக்கள்
ribroast - உரக்க அடித்தல்
rice - அரிசி, சோறு

rice cooker - சோறடுவம்
rice mill - அரிசி அரைவை ஆலை
rich - செல்வமுள்ள, செழிப்பான, பணக்கார, வசதியுள்ள, விலை உயர்ந்த
rickets - என்புருக்கி
rickety - கலகலத்த
rictus - அகன்ற வாய்
riddance - விடுவிப்பு
riddel - கோவில் எழினி, கோயில் எழினி
ride - இவர்ந்து செல், ஈருருளியில் ஏறிச்செல், குதிரையில் ஏறிச்செல், சவாரிசெய்
ride to - ஏறுலா செல்
rider - இவர்வோர், ஏறிச் செல்பவர், சவாரி செய்பவர்
ridge change over - போக்கு மாறும் இணை வரிகைக் கோடுகள்
ridge characteristics - வரிகைக் கூறுகள்
ridge enclosure - வரிகை அடைப்பு
ridge piece - முகட்டுக் கட்டை
ridge planting - வேலி நடவு
ridges - உள்ளங்கை பாதங்களிலுள்ள மெல்லிய கோடுகள், வரிகை
ridicule - எள்ளல், ஏளனம் செய்தல் கேலி பேசுதல், நகையாடல்
ridiculous - ஏளனமான
riding – breeches - சவாரி காற்சட்டை
riding coat - செலவு அங்கி
riding duty - குதிரையோட்டும் பணி
riding habit - சவாரி உடை
rifaaqat - தோழமை
riff - தெளிவுரை
riff-raff - கீழ் மக்கள்

rifle - புரிகுழல் சுழல் துமுக்கி
rifleman - துமுக்கி வீரன்
rifler - திருடன்
rift - வெடிப்பு , பிளவு
rig - கருவி
rigadoom - குரவைக் கூத்து,
கிளர்ச்சியர் நடனம்
rigged market - நிலைச் சந்தை
rigged path - கடும்வழி
right - உரிய, சரியான, பொருத்தமான
right forest - வனத்துய்ப்பு உரிமை
right to information act - தகவல் அறியும் உரிமைச் சட்டம்
righteous - நேர்மையான
righteous path - நன்னெறி, செந்நெறி
rightly - ஏற்ற வகையில், சரியாக
rights - உரிமைகள்
rightwards - வலப்புறமாக
rigid - உறுதியான, கட்டுறுதியான,
கண்டிப்பான, விறைப்பான
விட்டுக்கொடுக்காத
rigidity - உறுதி, கடுமை
rigmarole - நீட்டிப்புப் பேச்சு
rigor - விறைப்பு
rigorism - வன்கடுமைப் பாங்கு
rigormortis - தசை இறுக்கம், பிணவிறைப்பு
rigorous - கடுமையான,
கண்டிப்பான
rill erosion - சிற்றோடைஅரிமானம்
rim - வட்ட விளிம்பு
rime - பனிப்படிவம்
rimer - மாழைத் துளைப்பான்
rimjhim - தூறல் தாளம்
rimple - சிற்றலை
rinderpest - வெக்கை நோய்
ring bark - பற்றைக் கீற்றிடு

ring binding - வளையக் கட்டகம்,
- வளையக் கட்டுமானம்

ring bolt வளைய மரையாணி

ring counting - கீற்றெள்ளல்

ring frame - வளையச் சட்டகம்
நூற்கும் வட்டப் பொறி

ring gall - மேற்காயக் கழலை

ring gauge - வட்டஅளவி

ring growth - வளர்ச்சிக் கீற்று

ring hunt - தீவளைய வேட்டை

ring leader - கலகத் தலைவன்
கலகக் குழுத்தலைவன்

ring master - வட்டரங்கு மேலாளர், வட்டரங்கர்

ring shake - கீற்று விரிவு

ring stand - வளைத் தாங்கி

ring to - வளைக் கீற்றிடு

ring tone - (தொலைபேசி, கைப்பேசி),
மணியோசை, மணியொலி

ring wall - சுற்றடைப்புச் சுவர்,
உறைக் கிணறு

ringdore - மணிப் புறா

ring-dove - காட்டுப் புறாவகை

ring-let - சிறு மோதிரம்

rink - பனிச்சறுக்கு ஆட்டக்களம்

rinse - கழுவுதல்

riot - கலகம், கலவரம்

rioter - அமைதியைக் குலைப்பவன்,
கலகக்காரன்

rip - கொய் (தல்), கிள்ளு

rip hook - பிளவுத் தூண்டில்

riparian - ஆற்றங்கரை நிலம்சார்

riparian right - ஆற்று நிலங்களுக்கு நீர்
பெறும் உரிமை

ripe compost - மட்கிய எரு,
பதப்படுத்தப்பட்ட எரு

riposte - இடக்கு உரை
ripple - சிற்றலை
ripple - mark - சிற்றலைக் குறி
ripple-cloth - அலை வரித் துகில்
ripplet - குறுந்திரை
ripsaw - பிளப்பு அரம்
rise - அதிகரிப்பு, உயர்வு, நில், எழுந்திரு, ஏற்றம், தோன்று, விழித்தெழு
risibility - சிரிப்பாற்றல்
rising - உயருகிற, ஏறுகிற
rising and setting - எழுச்சியும் வீழ்ச்சியும்
rising demand - அதிகரிக்கும் தேவை
rising generation - புதிய தலைமுறை
risk - இடையூறு, இன்னல்
risk averse - இடர் கடிதல்
risk factors - இடர்க் காரணிகள்
risk fire - தீ இடர்
risk-exposure - இடர்ப்படும் நிலை
risk-money - காசுக் கணக்கர் படி
risky - இடையூறான, கேடார்ந்த
risotto - புழுங்கல் அரிசி
risus sardonicus - பகடிப் புன்னகை, பகடிச் சிரிப்பு
rite - சட்டம், செயல்விதி, வழக்கம்
rite of hospitality - விருந்தோம்பல்
rites - ஈமச் சடங்கு, சடங்கு முறை
ritual - சமயச் சடங்கு
ritualism - சடங்கு இயல் கோட்பாடு
ritualist - சடங்கு வெறியர்
ritzy - விலையுயர்ந்த
rival - எதிராளி, எதிராள், போட்டியாளர்
rivalry - போட்டி, போட்டியுணர்வு
rivalship - போட்டியிடுதல்
river - ஆறு
river - god - நதித் தெய்வம்

river basin - ஆற்றுப் பெருநிலம்
river horse - நீர் யானை
river mining - ஆற்றுச் சுரங்கப்பணி
river piracy - ஆற்று மடைமாற்றம்
river valleys - ஆற்றுப் பள்ளத்தாக்குகள்
riverain - நதிக்கரை வாழுநர்
riverbed - ஆற்றுப் படுகை
river-craft - ஆற்றுப் படகு
rivet - தறையாணி, குடையாணி, கடாவும் ஆணி
riveter - தறைஞர் (தறிஞர்)
rivetment - கற்பதிப்பு
riviere - அடுக்கு மணிமாலை
road - சாலை
road alignment - சாலை நேர்பாடு
road book - சாலை வழிகாட்டேடு
road drag - சாலை இழுவை
road man - சாலை செப்பனிடுபவர்
road margin - சாலையோரம்
road net work - சாலையமைப்பு
road rage - சாலைச் சீற்றம்
road roller - சாலை உருளை
road sand - சாலை மணல்
road sense - சாலை விதியுணர்வு
road worthy - தகுதிச் சாலை
roadmap for peace - அமைதித் திட்ட வரைவு
road-metal - சரளைக் கல்
roadside romeos - தெருவுலாவித் திரிவோர்
roadstead - கப்பல் துறை
roam - சுற்றித்திரி, சுற்றியலை
roaming - அலைதல், சுற்றுதல், திரிதல்
roaming facility - அலைவு வசதி
roan - கபிலைப்பசு
roarer - பேரொலி எழுப்புநர்
roaring sand - மணற்புயல்

roast - முறுகல்
roaster - வதக்குநர்
roasting furnace - வறுப்புலை
roasting jack - அகப்பைக் கோல்
roasting meat - வதக்கிறைச்சி
roaver - பேரொலி செய்பவர்
robber - கொள்ளையன், திருடன்
robbery - கொள்ளை, வழிப்பறி
robert - காவற்றுறையாள்
robes - பதவிக்குரிய நீண்ட மேலங்கி
robin - காரி , கரிக்குருவி
robocall - வணிகப் பதிவுரை
roborant - தெம்பு மருந்து, வலிமை தரும் மருந்து
robot - இயந்திர மாந்தன்
robust - உறுதியான உடல் கொண்ட, கட்டுரமார்ந்த
rock - பாறை, தாலாட்டு
rock bottom - அடிமட்டம்
rock drill - பாறைத் துரப்பணம்
rock exposed - தெரி பாறை
rock igneous - ஒளியுமிழ் பாறை
rock mantle - பாறைப் படிவு
rock mark - பாறைக் குறி
rock medium - இடைத்தரப் பாறை
rock metamorphic - உருமாறிய பாறை
rock sedimentary - படிவுப் பாறை
rock slide - பாறைச் சரிவு
rock soft disintegrated - பொடிபட்ட மென்பாறை
rock submerged - நீருள் அமிழ்பாறை
rock surface - மேல் பரப்புப் பாறை
rock-crystal - படிகப் பாறை
rocket - ஏவுகணை
rocket fighter (ord) - ஏவுகணை தாக்கி
rocket science - ஏவுகலன் அறிவியல்

rocking chair - ஆடும் நாற்காலி
rockumentary - துள்ளாட்ட ஆவணப்படம்
rockwork - பாறை வேலை
rocky pool - பாறைக் குளம்
rococo - மிகு ஒப்பனை
rod - கம்பி, தண்டு
rod man - தூண்டிலாளர்
rod pump - தண்டு எக்கி
rodent - கொறித்துண்ணி, எலிவகை
rodomel - தேன் முளரிச் சாறு
rodomontad - வீம்புப் பேச்சினன்
rodomontade - அடம்பன்
rodomontader - வீறாப்புக்காரர்
rodontade-vain boart - பகட்டுப் பேச்சு
roentgenography - கதிர்ப்பட வரைவியல்
roentgenology - கதிரியல்
rogueing - களைந்தெறிதல்
roguery - குறும்புத்தனம்
roguish - கயமைத்தனம்
roil - எரிச்சலூட்டு
roister - கொந்தளிப்பு
roisterer - பெருங் கூச்சல் இடுபவர்
role - பாத்திரம், கடமை, செயல், நடிப்பவரின் பாகம், நடிப்பு, பங்கு
role model - எடுத்துக்காட்டு, ஏந்தல், சான்றாள், நன்மாதிரியர்
role play - பங்கேற்பு
roll call - வருகைப் பதிவு
roll cap - சுருள் பொட்டுவெடி
roll of honour - சிறப்புற்றார் பட்டியல்
rollback - திரும்பப் பெறு
rolled iron - உருட்டு இரும்பு
rolled print - கை வரிகைப் பதிவு
roller bandage - சுருள் கட்டு
roller chain - உருளைத் தொடரி

roller stand - உருளைத் தாங்கி
rolley - பாரப் பொறி வண்டி
rollick - ஆரவாரக் களியாட்டம்
rolling examination center - சுழல் நோட்டகர் (தொடரி)
rolling pin - மரக்குழவி
rolling shutter - கரந்தியல் கதவு, கரந்தியல் சார்த்தி, சுருள் கதவு
rolling stock - இருப்புப் பாதை ஊர்தி
romanticism - புனைவியல், கலையியக்கம்
romanticness - வீணெண்ணம்
rompish - துள்ளாட்டம்
ronde - கையெழுத்துரு அச்செழுத்து
roneo - படி பெருக்கு
roneo machine - படி பெருக்கும் கருவி
roentgenography - ஊடுகதிர்ப் படவியல்
roentgen ray - ஊடுகதிர், நுண் அலைக்கதிர்
roentgencoscript - ஊடுகதிர்வழி நோயறிதல்
roentgenogram - ஊடுகதிர்ப் படம்
roentgenotherapy - ஊடுகதிர் மருத்துவம்
roof - கூரை
roof exhaust - கூரைக் காற்றுப் போக்கி
roof extractor - கூரைக் காற்றுறிஞ்சி
roof inhabitants - கூரைவாழ் உயிரிகள்
roof of the mouth - மேல் அண்ணம்
roof rack - ஊர்திக் கூரையடுக்கம்
roofings - கூரைகள், கூரைவீடுகள், மேற்கூரை
roofy - கூரையுள்ள
rookery - பறவை வாழிடம்
room - அறை
room spray - அறை மணமூட்டி
roomate - உடனுறை தோழன்
roomy - ஏந்தான இடம்
roomy home - பல அறை இல்லம்
rooster - வீட்டுச் சேவல்

root - அடிப்படை, காரணம், மூலம், வேர்
root - nodule - வேர்முடிச்சு
root buttress - தாங்குவேர்
root canal - வேர்க்கூழ், பற்சொத்தை நீக்கல்
root cause - அடிப்படைக் காரணம், மூலக்காரணம்
root collar - வேர்க் கழுத்து
root crop - வேர்க்கிழங்குப் பயிர்
root directory - வேர் அடைவு
root folder - மூலக் கோப்புறை
root graft - வேர் ஒட்டு
root main - தலைவேர்
root nodular - முடிச்சு அடைவேர்
root perfume - வேர் மணம்
root prop - தாங்கு வேர்
root rot - வேரழுகல் நோய்
root sheath - வேருறை
root shoot - வேர்முனை
root stilt - முட்டு வேர்
root stock - வேர்க் கிழங்கு
root swelling - வேர் வீக்கம், வேர்த் தடிமன்
root tap - ஆணிவேர்
root to stem - காய்கனி ஊண்
root zone - வேர் மண்டிலம்
rope - கயிறு, மெல்லிய கயிறு
rope car - கம்பி வடவூர்தி
rope drilling - கயிற்றுத் துரப்பணம்
rope driving - கயிற்று இயக்கம்
rope ladder - நூலேணி
rope walker - கழைக் கூத்தாடி
rope way - வடவழி
ropemanship - கழைக் கூத்தாண்மை
roper - கயிறு திரிப்பவர்
ropewalk - கயிற்றின் மீது நடத்தல்
ropeway - கயிற்றுப் பாதை

ropiness - திரி திரியாதல்
rosacea - செந்தோல் நோய்
rosarium - முளரித் தோட்டம்
rose - இளஞ்சிவப்பு, முளரி
rose cutter - வளைவு வெட்டி, பட்டை வெட்டு கருவி
rose engine - கடைசல் பொறி
rose milk - முளரி நறுமணப் பால், செம்பனிப்பால்
rose window - முளரியுருப் பலகணி
rosebit - துளைக்கருவி, துளையிடு கருவி
roster - வேலைமுறைப் பட்டியல்
rostrum - சொற்பொழிவு மாடம், பொழிவு மேசை
rotachute - சுழல் விண்குடை
rotameter - சுழல் மானி
rotary - அலைகிற, சுற்றுகிற, திரிகிற
rotary club - சுழற்கழகம், சுழற்குழாம்
rotary convertor - சுழல் மாற்றி
rotary furnace - சுழலுலை
rotary induction system - சுழல் தூண்டல் முறை
rotary press - சுழல் அச்சுப்பொறி, சுழல் அச்சு இயந்திரம்
rotary switch - சுழல் விசை
rotation - சுழல்முறை, சுழற்சி
rotation economical - பொருளாதாரச் சுழல் முறை
rotation financial - நிதிசார் சுழல் முறை
rotation of crops - சுழல்முறைப் பயிர்
rotation physical - பரிமாணச் சுழல் முறை
rotation silviculture - மரவளர்ப்பு சுழல் முறை
rotation technical - பயன்சார் சுழல் முறை
rotavator - சுழற் கலப்பை
rote - பொருளுணரா மனப்பாடம்
rotograph - கையெழுத்தேட்டின் ஒளிப்படம்

rotogravure - சுழல் செதுக்குருவ அச்சு, சுழல் செதுக்குருவ அச்சுவேலை
rotor - சுழலி
rotor blade - சுழல் தகடு
rotor craft - சுற்றகவூர்தி
rotory transformer - சுழல் மின்மாற்றி
rotten - அழுகிய, சீரழிந்த, பயனற்ற
rotten stone - மெருகுச் சுண்ணக்கல், மெருகுச் சுண்ண மணற்கல்
rotula - முழங்காற் சில்லு
rotunda - அரைக்கோளக் கூரை
roturier - எளியன்
roue - ஒழுக்கக் கேடன்
rough - கரடுமுரடான, சமமற்ற, தற்காலிகமான, வரண்ட, திருத்தத்திற்கு உட்பட்ட, முழுமையற்ற, மேடுபள்ளமான
rough chaff - நாயுருவி
rough cleaning - மேலோட்டமாகத் தூய்மை செய்தல்
rough copy - முதற்படி, கரட்டுப் படி
rough draft - முதல் வரைவு, கரட்டு வரைவு
rough estimate - தோராய மதிப்பீடு
rough paper - கழிவுத் தாள், கரட்டுத் தாள்
rough sketch - தோராய வரைபடம்
rough sleeper - வீடற்ற வாழ்நர் , வீடின்றி வாழ்வோர்
rough strain - முரட்டு இனம்
roughcast - கரட்டு வார்ப்பு
roughly - மேலோட்டமாக
round - உருண்டை வடிவான, கோளம், சுற்றுதல், நாற்புறமும் முழுமையான, வட்ட வடிவான, வட்டம்
round about - ஏறக்குறைய, சுற்றுவளைவான

roundel - பதக்கம்
rounding error - முழுமையாக்கல் பிழை
rounding off - முழுமையாக்கல்
roundly - முழுமையான
roundtana - சுற்றுத் திட்டு
rounion - மறு சந்திப்பு
rouser - தூண்டுவோன்
rout - வீழ்த்து
route - வழித்தடம்
route map - வழித்தட வரைபடம்
router - திசைவி
routine - வாலாயமான, வழக்கமான
routine clerk - வாலாய எழுத்தர், வழக்கமான எழுத்தர்
routine file - வாலாயக் கோப்பு, வழக்கமான கோப்பு
routine order - வாலாய ஒழுங்கு, வழக்கமான ஒழுங்கு
routine visit - வாலாயப் பார்வை, வழக்கமான பார்வை
routine work - அன்றாடப் பணி
rove - ஒழுக்கக் கேடன்
rover - உலவி
row - கலகம், வரிசை
துடுப்பினால் தள்ளல்
row dove - மலைப் புறா
row goat - மலையாடு
row-boat - துடுப்புப் படகு
rowdy - அரம்பன்
rowdyism - அடங்காமை, அரம்பத்தனம், கட்டுப்பாடின்மை, துடுக்குத்தனம், போக்கிலித்தனம்
row-type house - அணிவரிசை வீடு, நிரல்முறை வீடு
royal - அரசனைப் போன்ற

| | | |
|---|---|---|
| royal court | - | அரசவை |
| royal sail | - | பாய்மரம் |
| royal stag | - | கலைமான் |
| royal tennis | - | வளைப் பந்தாட்டம் |
| royalism | - | முடியரசுக் கோட்பாடு |
| royalty | - | உரிமைத் தொகை, உரிமைப் பங்கு |
| RPF (railway protection force) | - | தொடரிப் பாதுகாப்புப் படை (தொ.பா.ப.) |
| rsidual resistance | - | எச்ச மின்தடையமைவு |
| rub a dub | - | முரசொலித்தல் |
| rub stone | - | சாணைக் கல் |
| rubato | - | சந்தம் |
| rubber | - | அழிப்பான், தேய்ப்பான் |
| rubber road | - | தொய்வைச் சாலை |
| rubber stamp | - | இழுவை முத்திரை |
| rubber stamp works | - | தொய்வை முத்திரைப் பணி முத்திரை செய்யுமிடம் |
| rubber tube | - | தொய்வைக் குழாய் |
| rubber-band | - | தொய்வை வார் |
| rubbing stone | - | தேய்ப்புக் கல் |
| rubbish | - | கட்டடக் கழிவு, குப்பை, கூளம் |
| rubble | - | கட்டடத்தின் இடிந்த கற்குவியல் |
| rubble drift | - | உடைகல் பெயர்ச்சி |
| rubble masonry | - | கல்கட்டு வேலை |
| rubble stone | - | உடைகல் |
| rube | - | நாட்டுப்புறத்தான் |
| rubella | - | அம்மை வகை |
| rubeosis | - | செம்மை |
| rubicon | - | நிலைப்புத் தன்மை |
| rubigo | - | தேமல் |
| rubricate | - | செந்நிறக் குறி |
| rubrication | - | பின்புல வண்ணப் பூச்சு |
| ruburb | - | புறநகர்ப் பணி |

ruby - சிவப்புக் கல், சிவப்பு மணி, மாணிக்கம்
ruche - ஓரப்பின்னல்
rucks - திரள் நெரிசல்
ruckus - அமளி
ructation - உமிழ்தல்
rudder - சுக்கான் (கப்பலின் திசை திருப்பு கட்டை)
rudder pedals - சுக்கான் மிதிக்கட்டை
rudder torque - சுக்கான் முறுக்கம்
ruddle - செங்காவி
rude - நயமற்ற, முரட்டுத்தனமான
rudely - அநாகரிகமான, படிப்பற்ற, பண்பற்ற, முரட்டுத்தனமான
rudesheimer - கொடிமுந்திரி
rudiment - மூலக் கருக்கூறு
rudimental - அடிப்படையான,
- தொடக்க நிலையிலான
rudimentary - அடிப்படை, அடிப்படைக்குரிய, அரிச்சுவடிப் பாடம் போன்ற, தொடக்கம் சார்ந்த, முதற்கண் செல்வதற்கான
rue raddy - கோப்புக் கயிறு
rueful - துயர் மிக்க
ruefulness - துக்கம்
ruff - ஆண் உள்ளான் பறவை
ruffian - முரடன்
rug - தரை விரிப்பு
rugged - கரடுமுரடான
rugged land - கரட்டு நிலம்
rugged path - கரட்டுப் பாதை
ruin - அழிவு, கேடு, வீழ்ச்சி
ruination - அழிவு
ruined - அழிவுற்ற
ruined tank - தூர்ந்த ஏரி, பாழடைந்த ஏரி

ruinous - அழிவு தரக்கூடிய, கேடான
ruins - அழிபாடுகள், இடிபாடுகள்
rule - அரசாட்சி, ஆள், சட்டம், நெறி, முறைமை
rule joint - அளவுகோல்
rule log - துண்டாடல் விதி
rule of law - இறை முறை, சட்டத்தின் ஆட்சி
rule out - தகுதியற்றதெனத் தள்ளு
ruled - ஆளப்பட்ட
ruled paper - கோடிட்ட தாள்
ruledout - கைவிடல்
ruler - ஆட்சிசெய்பவர், ஆட்சியாளர், வரைவு
rules of games - விளையாட்டு நெறிகள்
ruling - ஆட்சி, ஆள்கிற, கட்டுப்படுத்துகிற, கோடிடல், கோடிடு
ruling machine - வரியிடு பொறி
ruling passion - உணர்வெழுச்சி
ruling prices - நிலவர விலைகள்
rulley - சுமை வண்டி
rum - மதுபானம்
rum runner - வெறிநீர்க் கப்பல்
rum start - வியப்பான நிகழ்ச்சி
rum tum - சிறிய படகு
rumba - நடனவகை, தேரொலி
rumble tumble - உந்து வண்டி
rumbler - குமுறுவோன்
rumbling of valcano - எரிமலைக் குமுறல்
rumen - முதல் இரைப் பை
rumination - கடந்த காலம் பற்றி சிந்தித்தல் கழிந்த நிகழ்வுகள் பற்றி சிந்தித்தல், புல்லுண்ணும் விலங்குகள் தின்றதை அசை போடுதல்

rumint - நம்பமுடியா உளவுத்துறைத் தரவு
rummage - துழாவித் தேடல்
rummage sale - இலவய விற்பனை
rummer - குடிநீர்க் கலம்
rumnative - சிந்தனைக்குரிய
rumour - அலர், ஊர்ப்பேச்சு, வதந்தி
rumour – monger - அலர் தூற்றி
rumourer - கதைகட்டி
rumpus - இரைச்சல்
run - இயக்கு, ஓடு, நடத்து,
run amok - தறிகெட்ட ஓட்டம்
run -of surface - தரைமேல் வழிந்தோடுதல்
run off - மேனீர் ஓட்டம்
run out - ஓட்ட இலக்குத் தோல்வி
runabout - எளிய அமைப்பு விசை வண்டி
runagate - நாடோடி
runaway knock - தட்டிக் கழித்தல்
runaway marriage - உடன்போக்கு
rung - குறுக்குச் சட்டம்
runlet - சிற்றாறு, சிறிய நீரோடை, சிற்றோடை
runner - இரண்டாம் நிலை வெற்றியாளர்
running - ஓடுகிற, ஓடுதல், ஓட்டம், நடைபெறுகிற
running commentary - நிகழ்ச்சித் தொடர் விளக்கவுரை
running current - நடப்புக் கடிதம்
running note file - தொடர் குறிப்புக் கோப்பு
running race - ஓட்டப் போட்டி
running record - நடப்புப் பதிவுரு
running room - தொடரிப் பணியாளர் ஓய்வறை
running sand - நிலையில்லாத மணல் பகுதி
run-off election - மறு சுற்றுத்தேர்தல்
runover injuries - மேலோடிய சிதைவுகள்
runway - ஓடுபாதை
rupee - உரூபாய், பணத்தாள், உருவா

ruption - முறிவு
rupture - தகர்வு
rural - ஊரகம்
rural development - ஊரக வளர்ச்சி, ஊரக மேம்பாடு
rural dispensary - ஊரக மருத்துவகம்
rural housing scheme - ஊரக வீட்டுவசதித் திட்டம்
rural manpower scheme - ஊரக மாந்த ஆற்றல் திட்டம்
rural water supply scheme - ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம்
ruralist - நாட்டுப்புறத்தான்
rurban - சிற்றூர் நகரம்
rush - ஓடு, ஓட்டம், பாய்ச்சல், பாய்ந்து செல், விரைவு
rush of expenditure - திரள்வேகச் செலவினம்
rusk - மொரமொரப்பான ஈரட்டித் துண்டு
rust - துரு, துருப்பிடித்த
rustic - ஊர்ப்புறத்தார், நாட்டுப்புறத்தார்
rusticate - ஊர்ப்புறத்தில் வாழ், வெளியேற்று, வெளியேற்றல்
rustication - இடைநீக்கம்
rusting - வண்ணச் சாயமிடல்
rustle - உரசலொலி, சரசரவொலி
rusty - துருப்பிடித்த
rut - தேர்க்காற்சுவடு
ruth - இரக்கம்
ruthless - இரக்கமற்ற, கருணையற்ற, கொடிய
rutter - குதிரைவீரன்
ruttle - தொண்டை எரிச்சல்
rux - உணர்ச்சிவெறி
rye - தவசவகை, புல்லரிசி வகை
ryotwari - நேர் குடிவார முறை

# S

| | | |
|---|---|---|
| S.S.L.C. (secondary school leaving certificate) | - | இடைநிலைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் |
| S.T.D. (subscriber trunk dialling) | - | உள்நாட்டுத் தொலைபேசி அழைப்புகள் |
| I.S.D. local (international subscriber dialing) | - | அயலக அழைப்புகள் |
| sabaoth | - | தேவர் படையணி, கணநாதன், கடவுள் |
| sabbatarian | - | ஞாயிறு கொண்டாடி |
| sabbatarianism | - | கிழமை ஓய்வு நாள் கொள்கை |
| sabbathless | - | ஓய்வற்ற |
| sabbatical leave | - | ஓய்வேற்பு விடுப்பு |
| sabbatism | - | ஓய்வு |
| sabellaridae | - | மண் சுதையீட்டுப் புழுக்கள் |
| saber | - | பட்டைக் கத்தி |
| saber toothedtiger | - | கோரைப்பல் பூனை |
| sabot | - | ஒரே கட்டைக் காலணி |
| sabotage | - | அழிவுச் செயல், சீர்குலைப்பு, வேண்டுமென்றே அழி, அழிவுப்பணி |
| saboteur | - | அழிம்பு வினைஞர் |
| sabre | - | பட்டாக்கத்தி, கொடுவாள் |
| sabre cut | - | கொடுவாள் வெட்டு |
| sabrejet | - | வாளூர்தி |
| sabre-rattling | - | வெற்று மிரட்டல் |
| sabretache | - | இவுளியர் |
| sabulous | - | மணலன்ன |
| sac | - | ஊனீர்ப் பை |
| sacared | - | வெருவிய தோற்றம் |
| saccade | - | விழிக் குழறல் |
| saccedaneum | - | மாற்றுப் பொருள் |
| saccharated | - | சக்கரையடங்கியுள்ள |

saccharification - சக்கரையேற்றுதல்
saccharinity - சக்கரை மானி
saccharoid - சக்கரையொத்த பொருள்
saccule - சிறு பையறை
sacebox - செருக்குக் கொண்டவர்
sachem - அரசியல் தலைவர்
sachet - சிறு பை, பொட்டலம்
sack - கோணிப் பை, பணியிலிருந்து நீக்கு, பாழாக்கு
sack race - சணற் பை ஓட்டப் பந்தயம்
sackage - கொள்ளையடிப்பு
sackbut - காலியம், பேரிசைக் கருவி வகை
sacked - பணி நீக்கம்
sackful - கோணிப்பை நிறைய
sacrad - மூவக எலும்பை நோக்கி
sacral vertebrace - மூவக முள்ளெலும்புகள்
sacral - இடுப்படி மூட்டெலும்பு
sacralgia - மூவக எலும்பு வலி
sacrarium - திருவுண்ணாழிகை
sacred - திருநிலையான, தூய்மையான
sacred groves - கோவில் காடுகள்
sacredness - தூய்மையான, நனி தூய்மை
sacrifice - ஈகம்
sacrilege - தெய்வக் குற்றம்
sacrilegist - போலித் துறவி, திருவழிப்பவன்
sacrist - கோவில் பணியாள், கோயில் பணியாள்
sacristy - கோவில் களஞ்சியம், கோயில் களஞ்சியம்
sacrosanctity - தூய்மை நிலை, திருநெறிக் காப்புடைமை
sad - வருத்தமான, வருந்தத்தக்க
sadden - வருத்து, வருந்தச் செய்
saddle - சேணம், பொறுப்புச் சுமத்து

saddle boiler - குடுவைக் கொதிகலம்
saddle rock - சேணப் பாறை
saddle stitch - சேணத் தையல், முதுகுத் தையல்
sadfishing - பரிவு வேண்டிச் சிக்கலாக்கல்
sadhu - சாது, துறவி
sadism - துன்புறுத்தி இன்புறல்
sadist - தீ மனத்தர், புன்மையர்
sadly - வருத்தத்துடன், வருத்தத்தோடு
sadquiry - துயருறு உசாவல்
safari park - கான் ஊர்தி உலா, வன ஊர்தி உலா
safari suit - ஒப்பாடை, வேட்டை உடை
safe - காப்பு நிலையடுக்கு, காப்புப் பெட்டகம்
safe custody - காப்புப் பொறுப்பு, சேமக் காப்பு, ஏமக்காப்பு
safe custody articles - சேமக் காப்பில் உள்ள பொருள்கள்
safe custody deposit - பாதுகாப்பு வைப்புநிதி
safe distance - காப்புத் தொலைவு
safe house - ஏம மறைவகம்
safe seat - காப்பு அமைவிடம்
safeguard - காப்பு, காப்பு செய், பாதுகாத்திடு
safely - அச்சமில்லாமல், பாதுகாப்பாக
safety belt - சேம வார்
safety cable - சேம வடம்
safety can - சேமக் கலன்
safety car - சேமவூர்தி
safety fence - காப்பு வேலி
safety fork - ஏமக் கவ்வி
safety lamp - சேம விளக்கு, காப்பு விளக்கு
safety lock - சேமத் தாழ், காப்புத் தாழ்
safety locker - காப்புப் பெட்டகம்
safety net - காப்பு வலை, ஏம வலை
safety paper - இணை காப்புத் தாள்

safety razor - காப்பு மழிதகடு
safety rod - காப்புக் கோல்
safety rope - சேமக் கயிறு, காப்புக் கயிறு
safety shoe - சேம மூடணி, காப்பு மூடணி
safety stake - காப்பு முளை
safety tube - சேமக் குழல், காப்புக் குழல்
safety vault - வைப்புழி, காப்பு வைப்புழி
safety wear - ஏமவுடை
safety wire - காப்புக் கம்பி
safety yield - அளபிறவா விளைவு, காப்பு விளைவு
safety zone - காப்பு மண்டிலம்
saffron - குங்குமப் பூ
sag pipe - தொய்குழாய்
sag - புடைசாய்வு
saga - தொன்மக் காப்பியம்
sagacious - அறிவு நுட்பமுடைய
sagacity - அறிவு நுட்பம், மதிநுட்பம்
sage - முனிவர், துறவி, பண்டாரம்
sagger - சூளைக் களிமண் உறை
sagita - சிலையோரை
sagittate - அம்புமுனை
saguaro - உயரக் கற்றாழை
said - சொல்லப்பட்ட, சொல்லிய
sail - கடற்செலவு, கடற்பயணம் கப்பல்பாய்
sail-axte - காற்றாடி இயந்திர ஊடச்சு
sailer - பாய்மரக்கலம், கடலோடி, கப்பலோட்டி
sailoring - மீகாமன் பணி
saint - துறவி, அருள்தொண்டர்
saintdom - திருத்தொண்டுழியம்
sainthood - திருத்தொண்டர் தகைமை
sakanology - ஆய்வு வினையியல்
sake - காரணம்

| | | |
|---|---|---|
| salability | - | விலைப்பாட்டுத் திறம், விற்றுப்போகும் தன்மை |
| salad | - | பச்சைக் காய்க்கலவை |
| salamander | - | உடும்பு |
| salariate | - | சம்பளக்காரர் |
| salaried | - | ஊதியம் வாங்குகிற, சம்பளம் பெறுகிற |
| salaries and allowances | - | சம்பளங்களும் படிகளும் |
| salary | - | சம்பளம் |
| salcrete | - | உவர்மணல் |
| sale account | - | விற்பனைக் கணக்கு |
| sale confirmation | - | விற்பனை |
| sale deed | - | விற்பனை ஆவணம் |
| sale notice | - | விற்பனை அறிவிப்பு |
| sale price | - | விற்பனை விலை |
| sale proceeds | - | விற்பனைத் தொகை, விற்றுமுதல் |
| sale return | - | விற்பனை வருவாய் |
| saleable | - | விற்கக்கூடிய |
| sales | - | விற்பனை |
| sales account | - | விற்பனைக் கணக்கு |
| sales analysis | - | விற்பனைப் பகுப்பாய்வு |
| sales and service | - | விற்பனையும் சேவையும், விற்பனையும் பேணுகையும் |
| sales assistant | - | விற்பனை உதவியாளர் |
| sales centre | - | விற்பனை நிலையம் |
| sales consultants | - | விற்பனை அறிவுரையாளர் |
| sales depot | - | விற்பனைக் கிடங்கு |
| sales ledger | - | விற்பனைப் பேரேடு |
| sales talk | - | விற்பனைப் பேச்சு, விற்பனை வரி |
| salesman | - | விற்பனையாளர் |
| salesmanship | - | விற்பனைத் திறமை |
| salient feature | - | சிறப்பியல்புகள், சிறப்புக் கூறுகள், நிகரில் கூறுகள் |
| salimeter | - | உப்புமானி |

| | | |
|---|---|---|
| salina | - | உப்புப் படுகை |
| salinelle | - | உவர்சேற்று எரிமலை |
| salinity | - | கரிப்பு |
| salinity current | - | உவர் நீரோட்டம் |
| salinometer | - | உவர்மானி |
| salivary gland | - | உமிழ்நீர் சுரப்பி |
| salivary pump | - | உமிழ்நீர் எக்கி |
| salla-a-manager | - | விருந்துக் கூடம் |
| salle-d-attente | - | ஊர்தி நிலையத் தங்கலிடம் |
| sally | - | எதிருரை |
| sally hole | - | மணிக்கயிற்றுப் புழை |
| sally-port | - | திட்டி வாயில் |
| salmi | - | கொத்துக் கறி வாட்டு |
| salon | - | வரவேற்பு அறை |
| saloon | - | அழகு நிலையம், முடிதிருத்தகம் |
| saloon bar | - | தேறல் கூடம், குடிப்பகம் |
| salpingectomy | - | சினைக்குழல் நீக்கறுவை |
| salpingian | - | கருப்பைக்குழல் சார்ந்த |
| salpingitic | - | கருப்பைக் குழலழற்சி சார்ந்த |
| salpingitis | - | சினைக்குழல் அழற்சி |
| salpingo - oophorectomy | - | கருப்பைக்குழல் சூலக நீக்கறுவை |
| salpingo - oophoritis | - | கருப்பைக்குழல் சூலகவழற்சி |
| salpingocele | - | கருப்பைக்குழல் பிதுக்க முன்துருத்தம் |
| salpingogram | - | சினைக்குழல் வரைபடம் |
| salpingography | - | கருப்பைக் குழல் கதிர்ப்பட வரைவி |
| salpingolysis | - | கருப்பைக் குழலொட்டுப் பிரிப்பறுவை |
| salpingopexy | - | கருப்பைக்குழல் பொருத்தறுவை |
| salpingoplasty | - | கருப்பைக்குழல் ஒட்டறுவை |
| salpingotomy | - | கருப்பைக் குழல் துமிப்பறுவை |
| salt | - | உப்பு |

| | | |
|---|---|---|
| salt - affected soil | - | உப்புத் தாக்க மண் |
| salt - cat | - | உப்புக் கலவை |
| salt - fog test | - | உப்புத் தெளிப்பு ஆய்வு |
| salt absorption | - | உப்பு அகத்துறிஞ்சல், அகத்துறிஞ்சல் |
| salt bath | - | உப்பு முழுக்கு |
| salt bed | - | உப்பளம் |
| salt box | - | உப்புப் பேழையகம் |
| salt bush | - | உப்புப் புதர் |
| salt cake | - | உப்பு அடை |
| salt contents | - | உப்பு அடக்கமுள்ள |
| salt crust | - | உப்பு மேற்படிவு |
| salt crystal | - | உப்புப் படிகம் |
| salt deposit | - | உப்புப் படிவு |
| salt desert | - | உப்புப் பாலைநிலம் |
| salt effect | - | உப்பு விளைவு |
| salt range | - | உப்புத்தொடர் |
| salt sensitive | - | உப்புக் கூருணர்வு |
| salt stress | - | உவர்சார் இறுக்கம் |
| salt well | - | உப்புக் கிணறு |
| saltant | - | குதித்தல், நடனமாடுகின்ற |
| saltation | - | உடனடி மாற்றம் |
| saltation load | - | திடீர்த்தாவல் சுமை, உடனடித்தாவல் சுமை |
| saltation velocity | - | திடீர்த்தாவல் திசைவேகம், உடனடித்தாவல் திசைவேகம் |
| saltatorial | - | குதிப்பாற்றலுடைய |
| saltatorial legs | - | தாவுங் கால்கள் |
| salt-bush land | - | உவர்ப்புதர் நிலம் |
| saltcellar | - | உப்புக் கலம் |
| salter | - | உப்பு விளைவிப்போர் |
| saltern | - | உப்பு உலர்த்துமிடம், உப்பளம் உப்பு காய்ச்சுமிடம் |
| salt-fish | - | கருவாடு, உலர்மீன் |
| salt-glacier | - | உப்புப் பனியாறு |

| | | |
|---|---|---|
| salticidea | - | தாவு சிலந்தி |
| saltierra | - | உப்பேரி ஆவியாக்கவழி , உப்புப் படுகை |
| saltigrade | - | தாவுதல் அமைப்புடைய |
| salti-hill | - | உப்புக் குவியல் |
| saltimbanco | - | போலி மருத்துவர் |
| saltire | - | குறுக்கைக் குறி |
| saltrheum | - | சொறிகரப்பான் |
| salty | - | இழிமன நிலை |
| salubrious | - | நோயின்மை |
| salutation | - | வணக்கம், வணங்குதல், வணங்குமுறை |
| salute | - | வணக்கம், வணக்கம் தெரிவி, வணங்கு |
| salvage | - | அழிவு மீட்பு, அழிவுக் காப்பு |
| salvage felling | - | மீட்பு வெட்டு |
| salvation | - | மீட்பு |
| salves | - | புண்ணாற்றிகள் |
| salvo | - | குண்டு முழக்கம் வரவேற்பு |
| samaritan | - | ஈத்து உவப்போர், கொடுத்து மகிழ்வோர் |
| same | - | அதே போன்ற, ஒரே, ஒரேபடித்தான |
| same variance | - | ஒரே மாறுபாட்டளவை |
| sammying | - | ஈரமாக்கல் |
| samosa | - | கறிப் பொதி |
| samphire | - | கடற்பாறைச் செடி |
| sample | - | மாதிரி |
| sample area | - | மாதிரிப் பரப்பு |
| sample enumeration | - | மாதிரிக் கணிப்பு |
| sample plot | - | மாதிரிப் புலம் |
| sample random | - | ஒழுங்கிலா மாதிரி |
| sample systematic | - | ஒழுங்குறு மாதிரி |
| sampler soil | - | மாதிரி மண் |

| | | |
|---|---|---|
| sampling | - | மாதிரி எடுத்தல், மாதிரி சேர்ப்பித்தல் |
| samson | - | பெருவலியன் |
| samurai | - | படையதிகாரி |
| sanad | - | கொடை ஆவணம், பட்டயம் |
| sanatorium | - | நல மருத்துவ நிலையம், நலவழி நிலையம், நல ஆக்க நிலையம் |
| sanctification | - | தூய்மைப்படுத்துதல் |
| sanctify | - | தூய்மைப்படுத்து |
| sanctimonious | - | பகட்டான , தூய்மைத் தோற்றம் |
| sanction | - | ஒப்பளிப்பு, ஒப்புதல் |
| sanction order | - | இசைவாணை |
| sanction supplementary | - | துணை ஒப்பளிப்பு |
| sanction to prosecute | - | குற்றவழக்குத் தொடர அனுமதி |
| sanctioned | - | ஒப்புதல் அளிக்கப்பட்ட |
| sanctioned strength | - | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
| sanctioning authority | - | ஒப்பளிக்கும் அதிகாரி |
| sanctioning powers | - | ஒப்பளிக்கும் அதிகாரங்கள் |
| sanctity | - | தூய்மை, நன் தூய்மை, |
| sanctorum | - | கருவறை |
| sanctuary | - | காப்பிடம், புகலிடம் |
| sanctuary city | - | புகலிட நகர் |
| sanctum | - | கருவறை |
| sand | - | மணல் |
| sand bank | - | மணற்கரை |
| sand box | - | மணற்கலம் |
| sand dunes | - | மணல் மேடுகள் |
| sand filling | - | மணலிட்டு நிரப்புதல் |
| sand floatation | - | மணல் மிதப்பு |
| sand fraction | - | உதிரிமணல், மணல் பங்கு |
| sand painting | - | மணல் ஓவியம் |
| sand paper | - | உப்புத் தாள் |
| sandalwood | - | சந்தன மரம் |
| sandbox | - | மணல்தொட்டி |

| | | |
|---|---|---|
| sandeel | - | விலாங்கு மீன்வகை |
| sandiper | - | உள்ளான் பறவை |
| sandiver | - | கண்ணாடிப் புரை |
| sandkey | - | மணல் திட்டு |
| sandscape | - | இயற்கை மணற் காட்சி |
| sandwhich course | - | பணியிடைப் படிப்பு |
| sandwich | - | இடையீட்டு அப்பம், இடைப்பொதி |
| sandwich generation | - | குடும்பப் பொறுப்பு அகவையினர் |
| sandy | - | மணற்பாங்கான |
| sane mind | - | செம்மைச் சிந்தை |
| sanforising | - | சுருக்கம் எடுத்தல் |
| sanforization | - | தைப்பதற்கு முன் நனைத்து, உலர்த்துதல் |
| sangfroid | - | நிலைகுலையாமை, அமைதி மனம் |
| sanguine | - | நன்னம்பிக்கையுடைய |
| sanguineness | - | நன்னம்பிக்கை ஆர்வம் |
| sanitarian | - | துப்புரவுப் பணியாளர் |
| sanitary | - | உடல்நல மேம்பாட்டுக்குரிய, உடல்நலமுள்ள |
| sanitary arrangement | - | துப்புரவு ஏற்பாடு |
| sanitary design | - | துப்புரவு அமைப்புமுறை |
| sanitary inspector | - | துப்புரவு ஆய்வாளர் |
| sanitary wares | - | துப்புரவுக் கலன்கள் துப்புரவுப் பொருள்கள் |
| sanitation | - | துப்புரவு, நோயர் அறை |
| sanity | - | நல்லறிவு நிலை |
| sansorial | - | உணர்வு தூண்டல் |
| sap green | - | பச்சைச் சாறு |
| sap headed | - | முட்டாளாக |
| sap wood | - | மரப்பட்டை, மரச்சோறு |
| sapid | - | சுவைமிகு , சுவையுடைய |
| sapient | - | அறிவுடைய |
| saples | - | துக்க உடுப்பு |
| sapling planting | - | மரம் நடுதல் |

saponaceous - வழலைத்தன்மை, மென்வழலைக் கட்டி

saponification - வழலையாக்கல்

saporous - சுவையான

sapper - அகழி வெட்டுநர்

sapphire - நீலக்கல், நீலம்

sappy - திறன் மிக்க

sapro phytes - சாறுண்ணிகள்

saprogen - அழுகல் நுண்மி

saprophyte - சாறுண்ணி , ஒப்பனைப் பொருளில் வாழும் உயிரி

saprot - இற்றுப்போதல்

sapstain - சாற்றுக் கறை

sapwood - மென் கட்டை

sarcasm - கடுஞ்சொல், வசைச்சொல்

sarcast - கேலி பேசுபவர்

sarcastic - கேலியான, வசைப்பாங்குடைய

sarcocalle - அண்டவாதம்

sarcolemma - தசைப் படலம்

sardonic - வெறுப்புடன் கூடிய , வெறுப்பான

sarration - அரம்ப விளிம்பு

sarsaparilla - நன்னாரி

sartorial - தையற்தொழிற் சார்ந்த

sashay - ஒயில்நடை

sassatude - மதிப்பிலாப் போக்கு

satanism - பேய்க்குணம்

satanology - பேய் நம்பிக்கை

satchel - பள்ளிப் பை , புத்தகப் பை

satcom - செயற்கைக்கோள் செய்தித் தொடர்பு

satellite - துணைக்கோள்

satellite city - துணை மாநகர்

satellite meteorology - செயற்கைக்கோள் வானிலை இயல்

satellite town - துணை நகரம்

satiable - மன நிறைவான
satiation - மன நிறைவு
satiety - திகட்டிப்போதல், தெவிட்டு நிலை
satin - ஒண்பட்டு
satire - அங்கதம், பகடி, சுடுசொல்
satiric - கிண்டல், பகடி நிறைந்த
satirist - நையாண்டியாளர்
satirize - கிண்டல் செய், பகடி செய்
satisfaction - மனநிறைவு
satisfactorily - மனநிறைவாக
satisfactory - மனநிறைவான
satisfiable - மனநிறைவளிக்கத்தக்க
satisfied - மனநிறைவடைந்த, மனநிறைவு
satisfy - மனநிறைவாக்கு, மனநிறைவு செய்
satisfying - மனநிறைவளிக்கக்கூடிய
satisfyingly - மனநிறைவு செய்தவாறு, மனநிறைவு செய்வதாக
satori - புத்தெளிவு, திடீர் மாற்றம்
satrap - கோட்டைத் தலைவன்
saturate - தெவிட்டச் செய்
saturated - தெவிட்டிய, பொந்திகை, மனநிறைவு
saturday - காரிக்கிழமை, சனிக்கிழமை
saturity - தெவிட்டல்
saturn - காரிக்கோள், சனிக்கோள், மைம்மீன்
sauce pan - வறுசட்டி
saucebox - திமிர்பிடித்தவர்
saucepan - கைப்பிடி சட்டி
saucer pit - தட்டைக் குழி
saudade - ஏக்க உணர்வு
saudering - வெள்ளை உள்ளான்
saumur - கொடிமுந்திரித் தேறல்

sauna - நீராவிக் குளியல்
saunter - உலாவுதல்
saunterer - திரிஞன்
saute - வதக்கூண்
savage - விலங்காண்டித்தனம்
savant - அறிஞர்
savate - குத்துச்சண்டை, மற்போர்
